தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர்

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மிளகாய் வற்றலை உடனே விற்கவும்

இந்தியா பொதுவாக உலகின் மசாலாக் கிண்ணம் என்று அழைக்கப்படுகிறது. உலகின் முக்கிய உற்பத்தியாளரான இந்தியா வெவ்வேறு நாடுகளுக்கு மசாலாப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தியாவில் கடந்த 2012-13 ல் 7.93 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 13 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. நம்நாடு 36 சதவீதம் பங்களித்து முதன்மை இடத்திலும் அதனைத் தொடர்ந்து சீனா (11 சதவீதம்), வங்காளம் (8 சதவீதம்), பெரு (8 சதவீதம்) மற்றும் பாகிஸ்தான் (6 சதவீதம்) ஆகிய நாடுகளும் உலக உற்பத்தியில் முக்கிய பங்களிக்கின்றன.

இந்தியாவில் மிளகாய் உற்பத்தியில் ஆந்திரப்பிரதேசம் 49 சதவீதம் பங்களித்து முன்னிலை வகிக்கிறது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (23 சதவீதம்), கர்நாடகா (16 சதவீதம்), ஒடிசா (8 சதவீதம்) மற்றும் மகாராஷ்டிரா (7 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் பங்களிக்கின்றன. ஆண்டுதோறும் இந்திய உற்பத்தியில் 85 முதல் 90 சதவீதம் மிளகாய் உள்நாட்டு நுகர்வுக்கும் 10 முதல் 15 சதவீத மிளகாய் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது.

2012-13ல் இந்தியாவின் மிளகாய் ஏற்றுமதி இலக்கு 2.40 இலட்சம் டன்களாகும். மிளகாய்த்தூள், காய்ந்த மிளகாய், மிளகாய் ஊறுகாய், மிளகாய் பேஸ்ட், சீவல் மிளகாய் போன்ற பல வடிவங்களில் இலங்கை, அமெரிக்கா, நேபாளம், மெக்ஸிகோ, மலேசியா, பங்களாதேஷ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இந்தோனேஷியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து மிளகாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் 2011-12ஆம் ஆண்டில் 56,442 எக்டரிலிருந்து 24,640 டன்கள் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. இராமநாதபுரம் (குண்டு), தூத்துக்குடி (குண்டு), சிவகங்கை

(சம்பா), விருதுநகர் (சம்பா) மற்றும் திருநெல்வேலி (சம்பா மற்றும் குண்டு) ஆகியன தமிழ்நாட்டில் மிளகாய் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். இந்தியாவில் நவம்பர் முதல் மே மாதம் வரை மிளகாய் வற்றல் வரத்து இருக்கும். நவம்பர் மாத இறுதியில் மத்தியப்பிரதேசம் மற்றும் கர்நாடகா மிளகாயும் டிசம்பர் மாத இறுதியில் ஆந்திர மற்றும் மகாராஷ்டிரா வற்றலும் சந்தைக்கு வரும். தமிழக மிளகாய் வற்றல் வரத்து மார்ச் மாதம் தொடங்கி மே மாதம் வரை இருக்கும். பயிராகும் அனைத்து மாநிலங்களிலும் பயிரின் நிலை, குறிப்பாக ஆந்திரப்பிரதேச பயிரின் நிலை, கையிருப்பில் உள்ள வற்றலின் அளவு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதித் தேவை ஆகியன மிளகாய் வற்றலின் விலையை நிர்ணயிக்கும் முக்கியக் காரணிகளாகும். வர்த்தக மூலங்களின் படி ஆந்திராவின் தற்போதைய கையிருப்பு சுமார் 100 இலட்சம் மூட்டைகள் (1 மூட்டை – 40 கிலோ) ஆகும்.

தற்போது விருதுநகர் சந்தையில் மிளகாய் வற்றல் குவிண்டாலுக்கு ரூ.6500 முதல் ரூ.7000 வரை விற்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், விருதுநகர் சந்தையில் கடந்த 17 ஆண்டுகளில் நிலவிய வற்றல் விலையை ஆய்வு செய்தது. பொருளாதார மற்றும் வர்த்தக ஆய்வு முடிவுகளின் படி மார்ச் - ஏப்ரல் 2014ல் மிளகாய் வற்றல் விலை குவிண்டாலுக்கு ரூ.6200 முதல் 6300 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விலை உயர்வுக்கான வாய்ப்புகள் இல்லை. ஆதலின் அறுவடை செய்த மிளகாய் வற்றலை உடனே விற்பனை செய்யுமாறு விவசாயிகள் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641003.
தொலைபேசி - 0422-2431405

<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்